**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 110/2021**

பெயர் : சொக்கலிங்கம் D.W.1. Cross

த/பெ. : அனுமந்தசாமி

தேதி : 09.10.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை:** –

1. வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ரூ.90,000/– கோரி தாக்கல் செய்துள்ளார். வாசாஆ 1 ஆன ஆவணம் நான் எழுதிக்கொடுத்தது என்றால் சரியல்ல. வாசாஆ 1ல் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. வாசாஆ 1ல் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என்பதை நிரூபிப்பதற்கு கைரேகை நிபுணரின் அறிக்கை பெற மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாசாஆ 1ல் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என்பதை நிரூபிக்க இதுநாள் வரை நான் எந்த நடவடிக்கையாவது எடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் தரங்கம்பாடி தாலுக்கா, காட்டுச்சேரி கிராமம், வடக்கு தெரு என்ற முகவரியில் இன்று வரை வசித்து வருகிறேன் என்றால் சரிதான்.

2. வாசாஆ 4ல் உள்ள முகவரி என்னுடைய முகவரி என்றால் சரிதான். வாசாஆ 1ன் படி நான் பிரதிவாதியிடமிருந்து தொகை பெற்றுள்ளேன் என்றாலும்,அதை திருப்பி தரக்கோரி வாதி எனக்கு வாசாஆ 4 ஆன அறிவிப்பை மேல்கூறிய முகவரிக்கு அனுப்பியுள்ளார் என்றாலும், நான் வேண்டும் என்றே வாங்க மறுத்து திருப்பி அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அந்த சமயத்தில் எனது மகள் வீட்டிற்கு சென்றிருந்தேன். நான் மேற்படி விபரத்தை எதிர் வழக்குரையிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் இந்த வழக்கிற்காக வாசாஆ 4 வந்த சமயத்தில் எனது மகள் வீட்டிற்கு சென்றதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது எதிர் வழக்குரையிலும், நிருபண வாக்குமூலத்திலும் கடந்த 18.10.2011ல் வாதிக்கும் எனக்கும் வாடகை ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வாடகை ஒப்பந்தத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் வாடகை ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், தாக்கல் செய்துள்ளதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே எந்த வாடகை ஒப்பந்தமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

3. வாசாஆ 1ன் படி நான் வாதிக்கு ரூ. 50,000/− கொடுத்து வரவு வைத்துள்ளேன் என்றாலும் பாக்கி தொகையான ரூ. 40,000/−ஐ நான் கொடுக்க கடமைபட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. வாதி நடத்தி வந்த ஆனந்தி டீலக்ஸ் தியேட்டரில் மேலாளராக நான் பணிபுரிந்தேன் என்றால் சரிதான். மேற்படி தியேட்டரில் இருந்த 28 மரசாத்துகள் மற்றும் 40 ஆஸ்பட்டாஸ் சீட்கள் ஆகியவற்றை நான் எடுத்து சென்றதால் தான் வாசாஆ 2 ஆன ஆவணத்தை நான் வாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வாசாஆ 2 ஆன ஆவணத்தில் உள்ள பொருட்களின் மதிப்பு ரூ. 26,000/− என்றாலும், நான் வாசாஆ 1 ன் படி நான் கொடுக்க வேண்டிய பாக்கி தொகை ரூ. 40,000/− மற்றும் வாசாஆ 2ன் படி ரூ. 26,000/− சேர்த்து மொத்தம் ரூ. 66,000/−ஐ வாதிக்கு கொடுக்க கடமைபட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

4. வாசாஆ 2 ஏற்படுத்திக்கொடுக்கவில்லை என்பதை நிரூபிக்க இது நாள்வரை நான் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி சங்கதிகள் அனைத்தும் உண்மை என்பதால் தான் வாசாஆ 4 ஆன அறிவிப்பு வாதியால் கொடுக்கபட்டது என்றாலும், அதை நான் வேண்டும் என்றே உள்நோக்கத்துடன் வாங்க மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் எனது எதிர் வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபிக்க எந்த வித ஆவணமும் தாக்கல் செய்யாததால் நான் எதிர் வழக்குரையில் கூறியுள்ள அனைத்து விபரங்கள் பொய்யானவை என்றால் சரியல்ல. வாசாஆ 1 மற்றும் வாசாஆ 2ன் படி நான் வாதிக்கு தொகை கொடுக்க கடமை பட்டுள்ளேன் என்பதால் நான் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. வாசாஆ1 மற்றும் வாசாஆ 2 நான் ஏற்படுத்திக்கொடுத்தது உண்மை என்பதால் தான் அதை பொறுத்து இது நாள் வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.